# சேவல் கூவிய பொழுது

# [மத்தேயு 26:31-75]

கிராமப்புறங்களின் அருகாமையில் வசிக்கும் ஒவ்வொரு வருமே காலை நேரத்தில் சேவல் கூவுவதைக் கேட்டிருப்பார் கள்-மேலும் அப்பறவை தனது சிறகை விரித்து, கம்பீரமாக கழுத்தை உயர்த்தி காலை நேரத்தை வரவேற்பதைக் கண்டு மிருப்பார்கள். சேவல் ஏன் இப்படிச் செய்கிறதென்று எனக்குத் தெரியாது.[1] ஆனால் ஒருவேளை அப்பறவை, பட்டாணி அளவேயுள்ள தனது சிறிய மூளையில் ஒரு பகுதியில், தான் கூவாவிட்டால் சூரியன் வரவே வராது என்று எண்ணம் கொண்டிருக்குமோ என்ற சந்தேகம் எனக்குள் உண்டு.

நான் சிறு பையனாக இருந்தபொழுது, சேவல் ஒன்று உணர்வுகளின் கலவையோடு கூவியதைக் கேட்டேன். அது ஒரு புதிய நாளின் தொடக்கத்தைக் குறித்தது. அது நன்றாயிருந்தது. மேலும், நான் எனது வெதுவெதுப்பான படுக்கையிலிருந்து எழுந்து, எனது அலுவல்களைச் செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டது. இது அவ்வளவு நன்றாயிருக்கவில்லை!

வரலாற்றில் ஒரு மனிதருக்கு சேவல் கூவினது சந்தோஷத் தைத் தராமல், ஆழமான துக்கத்தைக் கொண்டுவந்தது. அந்த மனிதரின் பெயர் பேதுரு. அந்த கவலை தரும் சம்பவத்தின் முடிவு மத்தேயு *26:73-75*ல் காணப்படுகிறது.

> சற்று நேரத்துக்குப் பின்பு அங்கே நின்றவர்கள் பேதுருவினி டத்தில் வந்து: "மெய்யாகவே நீயும் அவர்களின் ஒருவன்; உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது'' என்றார்கள். அப் பொழுது அவன்: "அந்த மனுஷனை அறியேன்" என்று சொல்லி, சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் கூவிற்று. அப்பொழுது பேதுரு: "சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய்" என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக்கொண்டு, வெளியே போய் மனங்கசந்து அழுதான்.

*சேவல் கூவுகிறதற்கு முக்கியத்துவம் அளித்து நாம் பேதுருவின் மறுதலிப்புபற்றி கற்றுக் கொள்வோம். நமது வேதவசனப் பகுதியாக மத்தேயு 26ஐ எடுத்துக்கொள்ளுவோம். இருப்பினும் மேலும் சில விபரங்களுக்காக இதன் இணை வசனப் பகுதிகளையும் (மாற்கு 14; லூக்கா 22; யோவான் 18) பார்ப்போம். முதலாவது நாம் பேதுருக்காக சேவல் கூவினதைப் பார்த்துவிட்டு, பின்பு நமக்காக சேவல் கூவுவதைப் பார்ப் போம்.*

## பேதுருவுக்காக சேவல் கூவியபொழுது

**அறிவித்தலும் மறுப்புகளும்**

*மத்தேயு 26ல் இயேசு தமது சீஷர்களுடன் மேல் வீட்டி லிருந்த காட்சியைப் படிக்கின்றோம். நடக்கப் போவதை அவர் அறிந்திருந்தபடியால், அவர் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு எச்சரிக்கை தர முயன்றார். "முன்னதாகவே எச்சரிக்கப்படுதல், முன்னதாகவே ஆயுததாரியாகுதலாகும்" என்று கூறப்படுகிறது. அவர் இதை, "... இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்" (வ. 31ஆ) என்று கூறியதன் மூலம் தொடங்கினார், "விழுதல்" என்ற கிரேக்க வார்த்தை பெரும்பாலும் "இடறலடைதல்" என்றே மொழி பெயர்க்கப் படுகிறது.[2] உள்ளார்த்தமாக இயேசு இவ்விடத்தில், "இன்றிரவு என்னைக் குறித்து நீங்கள் வெட்கமடைந்து இடறி விழுவீர்கள்" என்றார்.*

*பிறகு இயேசு, சகரியா 13:7லிருந்து மேற்கோள் காட்டு கிறார்: "மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரி யிலே ..." (வ. 31அ). மேய்ப்பனை வெட்டுதல் என்ற கருத்து இயேசுவின் மரணத்தைக் குறிப்பதாயிருக்கிறது. ஆடுகள் சிதறடிக்கப்படுதல் என்ற கருத்து, அவரது சீஷர்கள் பயந்து ஓடுதலைக் குறிக்கின்றது.*

*தமது சீஷர்கள் தம்மை விட்டுவிட்டு ஓடுவார்கள் என்று இயேசு அறிந்திருந்தும், அவர்களிடம் அவர் இன்னும் அன்பு செலுத்தி, ஏற்றுக்கொண்டிருந்தார். வசனம் 32ல் அவர் தமது உயிர்த்தெழுதல்பற்றியும், மறுபடியும் அவர்களோடு ஐக்கிய மாகுதல்பற்றியும் "ஆகிலும் நான் உயிர்த்தெழுந்த பின்பு,*

உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேன்'' என்று முன்னுரைத்தார்.

இருப்பினும் இந்த அன்பை பேதுரு கேள்வியுறவோ அல்லது அதைக் குறித்து அக்கறைப் படவோ இல்லை. அவர் கேள்விப்பட்டதெல்லாம், அவரும் மற்ற சீஷர்களும் இயேசுவைக் கைவிடுவார்கள் என்று கூறியதை மட்டுமே - இதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: "உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன் என்றான்" (வ. 33). போதகரைப் பார்த்து, நீங்கள் தவறுகிறீர்கள்: இம்முறை நீங்கள் தவறி விட்டீர்கள்" என்று கூறுவதில் முதலாவதாகவோ அல்லது கடைசியானவராகவோ இந்தப் பேதுரு இல்லை. (இன்றும் அநேகர் இத்தவறைச் செய்கின்றனர்).

கர்த்தருடைய பந்தி சற்று முன்னதாக ஏற்படுத்தப்பட்ட போது, பேதுரு அதில் கலந்து கொண்டார். மற்ற சீஷர்களுடனும், கர்த்தருடனும் அதில் ஐக்கியமானார். அவர் தாம் மிகவும் பலமுள்ளவராயிருப்பதாக எண்ணினார்! ''இது நடக்கவே நடக்காது" என்று உறுதியாக வலியுறுத்தினார்!

இயேசு மறுபடியும் எச்சரித்தார், பேதுருவிடம் அவர்: "இந்த இராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (வ. 34). ''சேவல் கூவுகிறதற்கு முன்னே" என்றால் "விடிவதற்கு முன்னே" என்று பொருள். அதாவது ''இன்னும் மூன்று, நான்கு அல்லது ஐந்து மணி நேரத்திற்குள்ளாக நீ என்னை மூன்றுதரம் மறுதலிக்கப் போகிறாய்" என்று பொருளாகும்.

இதைப் பேதுரு கற்பனை செய்துகூடப் பார்த்திருக்க மாட்டார். இது கறுப்பு வெள்ளையாகும், மேடு பள்ளமாகும், குளிர்ச்சி வெப்பமாகும், மற்றும் வெப்பம் உறைந்து போகும் என்பதைப் போன்றதாகும். எனவே அவர், "நான் உம்மோடே மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன்" (வ. 35) என்றார்! இது நமக்கு, "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்'' என்ற 1 கொரி. 10:12 வசனத்தை நினைவூட்டுகிறது.

**உண்மையும் விளைவுகளும்**

இயேசு தமது சீஷர்களுக்கு இவ்விதமாய் எச்சரிக்கையளித்த பிறகு, மேல்வீடு என்ற புகலிடத்தை விட்டு "உண்மையான உலகத்திற்கு" - கெத்செமெனேயில் உள்ள தோட்டத்திற்கு அவர்களையும் அழைத்துக் கொண்டு சென்றார். தோட்டத்தின் மையப்பகுதிக்கு பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரை மட்டும் இயேசு அழைத்துச் சென்றார். "விழித்தி ருந்து ஜெபம் பண்ணுங்கள்" (வ. 41) என்று அவர் அவர்களிடம் கூறினார்; ஆனால் அவர்கள் உறங்கினார்கள். கேட்கவேண்டிய போது பேசிய பேதுரு, இங்கு ஜெபிக்கவேண்டியபோது உறங் கினார். அவர் இடையூறு செய்பவராயிருந்ததில் ஆச்சரிய மில்லை!

அங்கு ஒரு கூட்டம் வந்தது, யூதாஸ் இயேசுவுக்கு ஒரு முத்தம் கொடுத்து அவரைக் காட்டிக்கொடுத்தான். பேதுரு தயாராக இருந்தார்; அவர் தமது பட்டயத்தை எடுத்து பிரதான ஆசாரியனின் வேலைக்காரனுக்கு அறுவைச் சிகிச்சை செய்தார்! அதாவது அவனைக் காதற வெட்டினார் (வ. 51; யோவான் 18:10). இயேசு அவரைப் பார்த்து: "உன் பட்டயத்தைத் திரும்ப அதின் உறையிலே போடு; பட்டயத்தை எடுக்கிற யாவரும் பட்டயத்தால் மடிந்து போவார்கள்" (வ. 52) என்று கூறினார்.

பேதுருவின் மறுப்பை இவ்விடத்தில் கற்பனை செய்து பாருங்கள்: "ஒரு நிமிடம் பொறுங்கள் கர்த்தரே! நான் உங்களுக் காக மரிக்கவும் தயார் என்று கூறியுள்ளேன் - நான் தயார்! என் பின்னால் வந்துவிடுங்கள், கர்த்தரே நான் உங்களைப் பாது காப்பேன், அவர்கள் உங்களைப் பிடிக்கவேண்டுமானால் முதலில் என்னை மேற்கொள்ளட்டும்." இருப்பினும் இயேசு, "பேதுருவே உன் பட்டயத்தை உறையிலே போடு" என்று கூறி னார். இப்படியாக பேதுரு எதார்த்த நிலையை முகமுகமாய்ச் சந்தித்தார். அவர் தமது மனுஷீகத்திற்கேற்றபடி திட்டமிட் டார். ஆனால் அது எஜமானின் திட்டமாயிருக்கவில்லை.

நாமும்கூட நமது மனுஷீகத்திற்கேற்றபடி திட்டமிடுகி றோம் அல்லவா? நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கென்று அநேக வசதிகளுக்காக நாம் முயலுகிறோம் - நமது வீடுகள், சொத்துக்கள், நமது வேலைகள், நமது ஆரோக்கியம் மற்றும் பலம் முதலியன இதில் அடங்கும். மேலும் நமது திருமணங்கள்,

துணைவர், துணைவி மற்றும் குழந்தைகளும் இதில் அடங்கலாம். இவை அனைத்தும் திடீரென எடுத்துக் கொள்ளப் படலாம். அப்படி நடக்கின்றபோது, அது நம்மால் தாங்க முடியாத சம்பவமாகிவிடுகிறது! ''கர்த்தரே! என்ன காரியங்களை எங்களுக்குச் செய்துவிட்டீர்?'' என்று கதறுகிறோம். ஒரு வேளை கர்த்தர் நாம் அவரை மட்டுமே சார்ந்திருக்க வேண்டும் என்று விரும்பலாம்.

இவ்விடத்தில் பேதுருவின் தற்பெருமையான மனம் காயப் பட்டது; இயேசு அவரை வெளிப்படையாகக் கடிந்து கொண்டார்.

பேதுருவுக்குள் எதார்த்தநிலை துளிர்விட்டுக் கிளம்பி, நிலை கொள்ளத் தொடங்கிற்று. இயேசு அக்கூட்டத்தாரால் பிடித்துச் செல்லப்படுகிறார். இயேசு முன்னமே கூறியபடி, "... அப்பொழுது, சீஷர்களெல்லாரும் அவரைவிட்டு ஓடிப் போனார்கள்" (வ. 56ஆ).

> இயேசுவைப் பிடித்தவர்கள் அவரைப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அங்கே வேதபாரகரும், மூப்பரும் கூடி வந்திருந்தார்கள். பேதுரு, தூரத்திலே அவருக்குப் பின்சென்று, பிரதான ஆசாரியனுடைய அரமனைவரைக்கும் வந்து, உள்ளே பிரவேசித்து, முடிவைப் பார்க்கும்படி சேவகரோடே உட்கார்ந்தான் (வ. 57-58).

இதைப்பற்றிக் கூறும் வேறோரு பதிவு, பிரதான ஆசாரியனின் அரமனைக்கு யோவானும் பின்தொடர்ந்து சென்றதாகக் கூறுகிறது (யோவான் 18:15).

அந்தக் கூட்டம் இயேசுவை அவர் வந்த வழியிலேயே மறுபடி நகரத்திற்கு இட்டுச் சென்றிருக்க வேண்டும் - தோட்டத்திற்கு வெளியே வந்து, கெதரோன் ஆற்றைக் கடந்து, மறுபடியும் நகருக்குள் வந்திருப்பார்கள் - பிரதான அரமனை வரைக்கும் வந்தார்கள். யோவான் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவராயிருந்தார் (ஒரு வேளை அவர் அங்கு வியாபாரத் தொடர்பு வைத்திருந்திருப்பார்), எனவே அவர் உள்ளே அனுமதிக்கப்பட்டார். பின்பு அவர் பேதுருவையும் உள்ளே வரவிடச் செய்தார் (யோவான் 18:16).

பேதுரு, மற்ற எல்லாக் கட்டிடங்களுக்கும் மத்தியில் இருந்திருக்கக் கூடிய அரமனை முற்றத்திற்குச் சென்றார். வேறோரு பதிவில், அங்கு சிறிய அளவில் நெருப்பு மூட்டப்

பட்டிருந்தது - வசந்தகால இரவின் குளிர்ச்சியைப் போக்க இது செய்யப்பட்டிருக்கும் - என்று எழுதப்பட்டுள்ளது. பேதுரு அவ் விடத்திற்கு உரியவர் போல நடிக்க முயன்று, நெருப்பினருகில் சென்று குளிர்காயத் தொடங்கினார். மத்தேயு 26:58ல் அவர், "முடிவைப் பார்க்கும்படி சென்றார்" என்றுள்ளது. திறந்திருந்த கதவுகள் மற்றும் ஜன்னல்கள் வழியாக அவர் உள்ளே நடந்த விசாரணையைக் கவனித்திருக்க வேண்டும்.

இன்னும் சற்று விரிவாய் இதற்குள் போகும்முன், ஒன்றை நாம் கவனிக்க வேண்டும் - சிங்கத்தின் குகை போன்ற - அந்த அரமனை முற்றத்தில் வேறு எந்த சீஷரும் இல்லை. யோவா னைத் தவிர[3] மற்ற யாவரும் சிதறி ஓடிவிட்டனர். எனவே பேதுருவின் ஒப்புக்கொடுத்தல் மற்றும் தைரியத்திற்காக நாம் அவரைப் பாராட்டியாக வேண்டும்.

பிறகு, அரமனை முற்றத்திற்குள் பேதுரு, யோவானை அனு மதித்த அடிமையின் வடிவத்தில் அங்கு எதார்த்தம் வந்து மோதுகிறது! (யோவான் 18:17). இந்த பெரிய பலமுள்ள மீன் பிடிப்பவரிடம் வந்து அந்தச் சிறு பெண், ஒரு எளிய வாக்கி யத்தைக் கூறுகிறாள்: "நீயும் கலிலேயனாகிய இயேசுவோடே கூட இருந்தாய் என்றாள்" (வ. 69இ). நெருப்பினால் அல்ல, மாறாக, கூடியிருந்த கூட்டத்தினால் பேதுரு உஷ்ணமானார்! பலமான அம்மனிதர் அச்சிறு பெண்ணிடம் நொறுங்கிப் போனார்: "அதற்கு அவன்: நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று எல்லாருக்கும் முன்பாக மறுதலித்தான்" (வ. 70).

பேதுரு பின்வாங்கினார். அவர் நெருப்பை விட்டு விலகி, இருட்டுக்குள்ளாக வாசல் நோக்கிச் சென்றார். அங்கு அவரை, வேறொரு வேலைக்காரி கண்டாள். "அவன் வாசல் மண்ட பத்திற்குப் போனபொழுது வேறொருத்தி அவனைக் கண்டு: இவனும் நசரேயனாகிய இயேசுவோடேகூட இருந்தான் என்று அங்கு இருந்தவர்களுக்குச் சொன்னாள்" (வ. 71). எல்லாப் பதிவுகளையும் ஒன்றிணைத்துப் பார்க்கும்போது, இவ்விடத் தில் அநேக மனிதர்கள் சேர்ந்து இதில் ஈடுபட்டனர் என்று தெரியவருகிறது. குறைந்த பட்சம் அதில் இரண்டு பேராவது, "ஆமாம் அது சரியே! இவனும் நசரேயனாகிய இயேசுவோடு இருந்தான்" என்று தொடர்ந்து கூறியிருப்பார்கள்.

இவ்விடத்தில் பேதுரு வியர்த்திருக்க வேண்டும். "அவனோ;

அந்த மனுஷனை நான் அறியேன் என்று ஆணையிட்டு, மறுபடியும் மறுதலித்தான்" (வ. 72). இவ்விடத்தில் "ஆணையிடுதல்" என்பது, நாம் குறிப்பிடுகின்ற தேவனுக்கு எதிரான காரியம் அல்ல. மாறாக, யூதர்களால் மரபு முறையாகக் கடைப்பிடிக்கப் பட்ட ஆணையிடுதலையே இது குறிக்கிறது, அவர் தாம் சொன்னது உண்மை என்று ஆணையிட்டார். அவர் இவ்விடத்தில் இரண்டாம் முறையாக மறுதலித்தார்.

**துயரமும் கண்ணீர்களும்**

பேதுருவின் உணர்ச்சி வேகமான மறுதலிப்புகள் அவர் பயந்தபடியே விளைவுகளை ஏற்படுத்தின; அவரைக் கவனிக்கும்படி அவர்களைத் தூண்டிவிட்டன. ஒரு சிறிய கூட்டம் கூடிற்று. பேதுரு காதற வெட்டினவனுக்கு உறவினன் ஒருவன் அங்கிருந்தான். அவர்கள், "... மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்; உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது என்றார்கள்" (வ. 73ஆ).

கலிலேயர்களின் பேச்சு வழக்கு தனிப்பட்டதாயிருந்தது. அவர்கள் தங்கள் வார்த்தைகளைத் தெளிவின்றி உச்சரிப்பார்கள். அநேக எழுத்துக்களை ஒரேமாதிரி உச்சரிப்பார்கள்; சில எழுத்துக்களை உச்சரிக்காமலே விட்டுவிடுவார்கள். அவர்களுடைய உச்சரிப்பு எவ்வளவாய் அருவருக்கக் கூடியதாயிருந்ததென்றால், ஜெப ஆலயத்தில் ஆசீர்வாத வார்த்தைகளைக் கூற கலிலேயரை அனுமதிப்பதில்லை என்பதை, மற்ற யூதர்கள் ஒரு சட்டமாகவே பின்பற்றினார்கள். பேதுரு தமது வாயைத் திறந்த ஒவ்வொரு வேளையும் அலபாமாவில் ஒரு பாஸ்டோனியனைப் போலவே நின்றார்.[5]

அப்பொழுது அவன்: "அந்த மனுஷனை அறியேன்" என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான் (வ. 74அ). பேதுரு இவ்விடத்தில் முறைப்படியான ஒரு ஆணையிடுதலை மீனவர்களின் தெளிவற்ற பேச்சு வழக்கில் கலந்திருக்க வேண்டும். "இல்லை, இல்லை, இல்லை, எனக்கு அவரைத் தெரியாது" என்று பேதுரு சத்தமிட்டு இப்படியாக மூன்றாம் முறை மறுதலித்தார்.

லூக்கா இவ்விடத்தில், "அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப் பார்த்தார்" (லூக். 22:61) என்ற கருத்தைக்

கூடக் கொடுக்கிறார். ஜன்னல் அல்லது கதவு வழியே இயேசு பேதுருவை நோக்கிப் பார்த்திருக்கலாம். விசாரணையின் நிமித்தம் இயேசுவை அவர்கள் ஓரிடம் விட்டு வேறிடம் இழுத்தபோது அவர் பேதுருவை பார்த்திருக்கலாம். சூழ்நிலை எப்படியிருப்பினும், இயேசு தமக்கு நிகழ்ந்த எல்லாவற்றின் மத்தியிலும், பேதுருவுக்கு நிகழ்ந்தவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

பேதுரு தாம் செய்ததை உணர்ந்தபோது என்ன பதில் செயல் செய்தார் என்பதைக் கவனியுங்கள்: "... உடனே சேவல் கூவிற்று ... வெளியே போய் (குற்றம் நடந்த இடத்தை விட்டு வெளியேறி) மனங்கசந்து அழுதான்" (வ. 74ஆ-75ஆ).

## நமக்காக சேவல் கூவியபொழுது

நம்மை நாமே வஞ்சிக்காமலிருக்கப் பார்ப்போம். நாம் எல்லாரும் பேதுரு நின்ற இடத்தில் நின்றிருந்தோம். மரித்த ஃப்ரெட் மெக்ளங் என்ற சகோதரர், "மோசே நின்ற இடத்தில் நான் நின்றேன்" என்ற தலைப்பில் ஒரு பிரசங்கம் செய்தார். அதில் அவர் தாம் ஒரு திரைப்பட ஒப்பந்தத்தை இரத்து செய்ததுபற்றி விளக்கினார். மோசே பார்வோனின் அரமனையை விட்டுக்கொடுத்ததுபோல, ஃப்ரெட் ஒரு ஊழிய வாழ்க்கை மேற்கொள்ளவேண்டி, புகழ், ஐசுவரியம் ஆகியவற்றை ஒதுக்கித் தள்ளினார். ஃப்ரெட் அல்லது மோசே நின்ற இடத்தில் நாம் நில்லாமல் இருந்தாலும், பேதுரு நின்ற இடத்தில் நாம் நின்றிருக்கிறோம்.

ஆராதனை வேளையில், "நான் உமக்கே சொந்தம், கர்த்தாவே" என்று பாடும்போது நாம் பலமுள்ளவர்களாக உணர்கின்றோம். மற்ற சகோதர கிறிஸ்தவர்களோடு சேர்ந்திருக்கையில் நாம் உறுதியுள்ளவர்கள் என்று நினைக்கிறோம். கிறிஸ்துவை நீங்கள் எப்போதாவது மறுதலிப்பீர்களா என்று நம்மிடம் கேட்டால் "இல்லை! ஒருபோதும் இல்லை" என்று பதில் சொல்லக்கூடும். பிறகு நாம் "உண்மை உலகத்திற்கு" வந்து சேருகிறோம். சோதனைகள் நம்மை சோதிக்கும்போது, கூட்டம் நம்மைச் சூழும்போது, நம்மோடு இருப்பவர்கள் நம்மை வலியுறுத்தும்போது, கதையே வித்தியாசமாகி விடுகிறது.

ஜனங்களுக்கு, அவர்களின் சக மனிதர்களின் வலியுறுத்துதல்

என்ன செய்யக் கூடும் என்பது பற்றி அநேக விளக்கங்களை சமீபத்தில் படித்திருக்கிறேன். காது கேளாத ஒரு பையன் தன்னை வித்தியாசமாய் காட்டாதிருக்கவேண்டி, காது கேட்கும் கருவியை அணிவதில்லை. பார்வையற்ற ஒரு பெண் தனது நிலையை மற்றவர் அறியாதிருக்கும்படிக்கு, தன்னைத் தானே சுவரிலும், மற்ற பொருட்களிலும் மோதி காயப்படுத்திக் கொண்டாள். இளம் வயதினரிடையே நடந்த பரிசோதனை ஒன்றில் மற்ற இளம் வயதினர் கூறினார்கள் என்பதற்காகவே சிலர் குறுகிய வார்த்தையை நீளமான வார்த்தை என்றனர். நீங்கள் நகைச்சுவை என்று கருதாத ஒரு ஜோக்கிற்கு, மற்றவர் கள் சிரிக்கிறார்களே என்பதற்காக எப்போதாவது நீங்களும் சிரித்ததுண்டா?

நமது நல்ல நோக்கங்களை, எதார்த்தம் வந்து மோதும் போது, நாம் கிறிஸ்துவை மறுதலிக்கிறோம். நமது வார்த்தை யாலோ, செய்கையாலோ அல்லது நாம் பேச வேண்டிய தருணத்தில் மௌனமாயிருப்பதாலோ நாம் அவரை மறுதலிக்க லாம். சில சமயங்களில், நாம் அவரை ஒரு முறை மாத்திரமல்ல - நமது மனச்சாட்சியின் குரலுக்கெதிராக, மறுபடி, மறுபடி மறுதலிக்கின்றோம்.

நமது மனச்சாட்சியை நாம் எப்படி சற்று அடக்கி வைக்கி றோம் என்பது கவனிக்க ஆர்வமானது. காரில் இருக்கைக் கச்சைகள் முதன்முதல் வந்த நாளை நினைத்துப் பாருங்கள். அநேக கார்கள் எச்சரிப்பு மணி பொறுத்தப்பட்டு, பயணிகள் இருக்கைக் கச்சைகளை கட்டிக்கொள்ளா விட்டால், அம்மணி ஒலிக்கும்படி செய்யப்பட்டிருந்தது. எனது நண்பர்களில் அநேகர் இந்த மணியை வெறுத்தனர். அவர்கள் இருக்கைக் கச்சை களை கட்ட விரும்பவில்லை, அதற்காக அவர்களை எச்சரிக்கும் மணியொலியையும் விரும்பவில்லை. இப்படியாக, அவர்கள் அந்த அழைப்பு மணியைச் செயல்இழக்க வைத்தனர். சிலர் அம் மணியொலிக்காதபடி செய்தனர். நம்மில் சிலர் நமது மனச் சாட்சிக்குக்கூட இப்படிப்பட்ட செயலைச் செய்கின்றோம். தேவன் அளித்துள்ள எச்சரிப்பு அமைப்புகளில் முக்கியமான இந்த மனச்சாட்சியை - நாம் விரும்புவது கிடையாது, எனவே அதை கவனியாமல் விடுகிறோம். நாம் அதை “துண்டித்து விட்டு” நமது வழியில் போகிறோம்.

அதாவது, சேவல் கூவும் வரை நாம் நமது வழியில் போகிறோம் - நமது பாவத்தை நமக்கு உணர்த்தும் வகையில் ஏதாவதொன்று நடக்கும்வரை நாம் அப்படிச் செல்லுகிறோம். ஒருவேளை நமது நண்பர் ஒருவர் ஒரு வார்த்தை சொல்லக் கூடும், அல்லது ஒரு வேதபாட வகுப்பு, ஒரு பிரசங்கம், ஒரு பாடல் அல்லது ஒரு ஜெபம் இவற்றின் மூலம் ஒரு எச்சரிப்பை நாம் பெறக்கூடும். அல்லது நமக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படும்போது, நமது நண்பர்களில் ஒருவர் மரிக்கும்போது, பொருளாதாரச் சீரழிவு நமக்கு ஏற்படும்போது, குடும்பத்தில் பிரச்சனை ஏற்படும்போது, நம்மைச் சுற்றியுள்ள உலகம் அலங்கோலமாகிவிடுகின்றபோது நாம் இப்படிப்பட்ட எச்சரிப்பைப் பெறுகின்றோம்.

வேதத்தில் ஜனங்களை எழுப்புகின்ற பல வித்தியாசப்பட்ட "சேவல்கள்" பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆதாம் ஏவாளுக்கு, தோட்டத்தில் நடந்து சென்ற தேவனின் குரல் எச்சரிப்பு தந்தது. தாவீதுக்கு, அவருடைய நண்பன் "நீயே அந்த மனுஷன்" என்று கூறிய வார்த்தை எச்சரிப்பு தந்தது. யோனா, தாம் விரும்பாத வகையில் மூன்று நாட்கள் மீனின் வயிற்றில் இருந்தது எச்சரிப்பு தந்தது. ஊதாரி மகனுக்கு, பன்றிகளின் மத்தியில், பசித்த வயிற்றுடன் இருந்தது எச்சரிப்பு தந்தது. இப்படி எது வேண்டு மானாலும் எச்சரிப்பு தரலாம்.

அது எதுவாயிருப்பினும், சேவல் கூவுகிறது: குற்றத்தை உணர்த்தும் மனச்சாட்சி முழு பலத்துடன், "குற்றவாளி; குற்ற வாளி" என்று சத்தமிடுகிறது. இதன் பிறகு நாம் பதில் செயல் புரிகிறோம், "என்ன காரியம் செய்துவிட்டோம்? இதை எப்படி நாம் செய்திருக்கக் கூடும்? தேவனிடமிருந்து இவ்வளவு தூரம் விலகிச் செல்ல நம்மை எப்படி நாமே அனுமதித்திருப்போம்?" என்று கதற ஆரம்பிக்கிறோம்.

சேவல் கூவும்போது, அது நாம் மூன்று விதத்தில் பதில் அளிக்கவேண்டிய நேரமாயிருக்கிறது.

### அது நினைத்துப் பார்க்க வேண்டிய ஒரு நேரம்

முதலாவது, அது நாம் நினைத்துப் பார்க்க வேண்டிய ஒரு நேரமாக உள்ளது. நமது வேத வசன பகுதியில், "அப்பொழுது பேதுரு ... இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்து

*...” (வ. 75ஆ) என்றுள்ளது.*

*நாம் நல்ல முறையில் போதனை பெற்றுள்ளோம். எப்படி வாழ வேண்டுமென்று நாம் அறிவோம். ஆனாலும், ஏதோ சில காரணங்களுக்காக நமக்குக் கிடைத்த போதனைகளையெல் லாம் நமது மனதிற்கு வெளியே அடைத்துவிட்டோம். இப் போது நினைத்துப் பார்க்கவேண்டிய நேரமாயிருக்கிறது.*

*நினைவு முக்கியமானதாயிருக்கிறது. ஊதாரி மகன் தனது தகப்பன் வீட்டை நினைத்துப் பார்த்தான். இயேசு எபேசு சபைக்கு, “நீ இன்ன நிலையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து ...” (வெளி. 2:5) என்று கூறினார்.*

*எதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்? தேவன் உங்களை நேசிக்கிறார் - தமது சீஷர்கள் சிதறிப் போவார்கள் என்று கூறியபோதும் கூட இயேசு அவர்கள் மீது அன்பு வைத்திருந்தார். சுவிசேஷத்தின் நற்செய்தியையும் அது தரும் எல்லா நல்ல விஷயங்களையும் நினைத்துப் பாருங்கள்-இயேசு தமது மரணம், உயிர்த்தெழுதல்பற்றி கூறினார். நீங்கள் திரும்ப வந்தால் தேவன் உங்களை மன்னிப்பார் என்பதை நினையுங் கள். இயேசுவின் வார்த்தைகள் அனைத்திலும் இதுவே வெளிப் படுகின்றது. தோல்வியுடன் எல்லாம் முடிவது இல்லை - நாம் அனுமதித்தால் ஒழிய தோல்வி நம்மை வீழ்த்துவதில்லை.*

**அது மனந்திரும்புவதற்கான ஒரு நேரம்**

*இரண்டாவதாக, சேவல் கூவும்பொழுது, அது மனந்திரும்ப வேண்டிய நேரம் ஆகும். “அவன் வெளியே போய் மனங்கசந்து அழுதான்” (வ. 75இ).*

*பேதுரு, இயேசுவைப்பற்றியோ, ஜனங்களின் தலைவர்கள் பற்றியோ மனக்கசப்பு அடையவில்லை, அல்லது பொருளா தாரம் ... உலக நிலை இவற்றுக்கு எதிராக மனக்கசப்பு அடைய வில்லை. தாம் இருக்கவேண்டிய நிலையிலிருந்து தவறியதற் காகவே பேதுரு மனம் கசந்து அழுதார்.*

*யூதாஸ் மற்றும் பேதுரு இவர்களுக்கிடையே உள்ள வேறு பாடு அடிக்கடி சுட்டிக்காட்டப்படுகிறது. கர்த்தரை யூதாஸ் விற்றபிற்பாடு அவனும்கூட மனக்கசப்பினால் நிறைந்தான். ஆனால் அவன் கண்ணீர் விடவில்லை, மாறாக வெளியே சென்று நான்றுகொண்டு செத்தான் (மத்தேயு 27:3). லௌகிக*

*துக்கத்திற்கும், தேவனுக்குக்கேற்ற துக்கத்திற்கும் வித்தியாசம் உண்டு (2 கொரிந்தியர் 7:10). மனக்கசப்புக்கும், மனந்திரும்பு தலுக்கும் வித்தியாசம் உண்டு.*

*சேவல் கூவும்பொழுது, அது ஒரு சந்தோஷமான நேரம் அல்ல, சேவலுக்கு ஏதேனும் தானியத்தைப் போட்டு அமைதிப் படுத்தும்படி நீங்கள் சோதிக்கப்படலாம். அல்லது அதன் கழுத்தை நெரிக்கும்படி கூட நீங்கள் சோதிக்கப்படலாம். ஆனால் தேவனுடைய ஈவாக இப்படிப்பட்ட எச்சரிப்புகள் நமது முரட்டாட்டத்தின் அளவை நாம் கண்டு, விழித்தெழுந்து கொள்ளும்படியாக நமக்கு அருளப்பட்டுள்ளன. எனவே, சேவல் கூவும்பொழுது, அது நமது இருதயத்தைப் பிளக்க வேண்டும். "தேவனே நாங்கள் பாவம் செய்தோம், எங்கள் சிந்தனை, சொல், மற்றும் செயலால் உமக்கெதிராகப் பாவம் செய்தோம், ஆனாலும் உமது உதவியோடு நாங்கள் நலமானதைச் செய்யமுடியும்" என்று சொல்ல வேண்டும்.*

**அது புதுப்பிக்க வேண்டிய ஒரு நேரம்**

*இது நமக்கு மூன்றாவது நினைப்பொன்றைத் தருகிறது: சேவல் கூவும்பொழுது, நாம் நம்மைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டிய நேரமாக இருக்கிறது.*

*"பேதுருவின் கண்ணீர் வெறும் மனக்கசப்பாக இல்லாமல், உண்மையான மனந்திரும்புதலைக் குறித்ததென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்கலாம். பேதுருவின் அடுத் தடுத்த செயல்களிலேயே இதற்குப் பதில் காணப்படுகிறது. இயேசு பேதுருவுக்கு அளித்த மற்றோரு சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொண்டார்.*

*சீஷர்கள் இடறலடைந்து சிதறிப்போவார்கள் என்று இயேசு சொன்ன அதே வேளையில், தாம் உயிர்த்தெழுந்து அவர்களைக் கலிலேயாவில் சந்திப்பதாகவும் கூறினார் (மத்தேயு 26:31-32). இயேசு மரித்தோரிலிருந்து எழுந்த பின்பு, திறந்திருந்த கல்லறையினருகே நின்ற தூதன் அங்கு வந்த பெண்களிடம், "சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்குமுன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்'' (மத்தேயு 28:7) என்று*

கூறினான். யோவான் 21ம் அதிகாரம் கலிலேயாக் கடலினருகில் இயேசு தமது சீஷர்களைச் சந்தித்ததை - விசேஷமாக வரிசையாய்க் கேட்ட கேள்விகள் மூலம் இயேசு பேதுருவை மனம் மாற்றிய விதத்தை-நமக்குக் கூறுகின்றது:

> அவர்கள் போஜனம் பண்ணின பின்பு, இயேசு சீமோன் பேதுருவை நோக்கி: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்றார். அதற்கு அவன்: "ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்றான். அவர்: "என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக" என்றார். இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா" என்றார். அதற்கு அவன்: "ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்" என்றான். அவர்: "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்றார். மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா" என்றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம் தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு: "ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்" என்றான். இயேசு: "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்றார் (யோவான் 21:15-17).

பேதுரு மூன்று முறை மறுத்தலித்தமைக்காக, இயேசு பேதுருவின் அன்பை மூன்றுதரம் உறுதி செய்யும்படி அழைத்தார்.

பேதுரு செய்யவேண்டிய பணிகள் இயேசுவிடம் இருந்தது என்பதை இங்கு நான் விசேஷமாய்க் குறிப்பிட விரும்புகின்றேன். மூன்று முறை இயேசு அவரிடம், "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று கூறினார். பேதுரு பயங்கரமான பாவம் செய்தார், ஆனால் அத்துடன் முடிந்துபோய் விடவில்லை. "கர்த்தரிடம் இரண்டாவது வாய்ப்பு பெற" அவர் இயேசுவை முக முகமாய் தரிசித்தார்.

கிருபையுள்ள அந்த வாய்ப்பைப் பேதுரு முற்றிலும் பயன்படுத்திக் கொண்டார். பெந்தெகொஸ்தே நாளன்று அவர் தைரியமாக எழுந்து நின்று, இயேசுவே கிறிஸ்து என்று அறிக்கையிட்டதை நாம் அப். 2ல் காணுகின்றோம். அப். 10ல் அவர் செசரியாவில் கொர்னேலியு மற்றும் அவரது வீட்டாருக்கு பிரசங்கிக்கச் செல்லுவதை காணுகின்றோம்.

நாம் விரும்பாத வரையில், சேவல் கூவுவது என்பது நமக்கு முடிவு அல்ல-அது ஒரு துவக்கமாக இருக்கமுடியும்-நாம் அதற்கு

நேர் மறையாகப் பதில் தந்தால்! இந்த அனுபவத் திலிருந்து வெளிப்பட்ட பேதுரு பலமுள்ள, ஞானமுள்ள மனிதர் ஆனார்; எஜமானுக்குப் பயன்படும் இன்னொரு நபரானார். பழைய வரலாறு ஒன்று, இதற்குப்பின் பேதுரு சேவல் கூவுகிற தைக் கேட்கும்பொழுதெல்லாம் முகம் சிவந்து, செய்தியளிப் பதில் சற்றுத் தடுமாற்றம் அடைந்து பின்பு மறுபடியும் முன்பு போலவே வைராக்கியமுள்ளவராய், அன்புடனும், புரிந்து கொள்ளுதலுடனும் பேசினார் என்று குறிப்பிடுகிறது.

உங்கள் வாழ்வில் எந்த ஒரு தவறும்-அது எவ்வளவு பெரிய தவறாக இருப்பினும்-தேவன் உங்களை விரும்பும் அளவி லிருந்து உங்களைக் குறைத்துவிட அனுமதிக்காதீர்கள், சேவல் கூவும் நேரம் நாம் விழித்து எழ வேண்டிய நேரம் ஆகும். அது நாம் நம்மைப் புதுப்பிக்கவேண்டிய நேரம் ஆகும்.

## முடிவுரை

நாம் சுலபத்தில் நழுவவிடக்கூடிய முக்கியமான பாடம் ஒன்று இச்சம்பவத்தில் உள்ளது. சுவிசேஷத்தை எழுதிய ஒவ் வொருவரும் பேதுருவின் விழுதல் பற்றி எழுதியுள்ளனர். மாற்கு தான் முதலில் சுவிசேஷத்தை எழுதினார் என்று அநேக பழைமைவாத கல்விமான்கள் கருதுகின்றனர். எனவே மாற்கு வின் எழுத்துக்கள்தான் முதலில் சுற்றுக்கும் வந்திருக்க வேண்டும்.மேலும், மாற்கு சுவிசேஷத்தில் உள்ள அச்சம்பவம் பேதுரு கூறியபடியே அமைந்துள்ளதாக அநேகர் கருதுகின்ற னர். பேதுரு எழுதிய பிரசங்கக் குறிப்புகளையே மாற்கு சுவி சேஷமாகத் தொகுத்தார் என்று பாப்பியஸ் என்ற வரலாற்று ஆசிரியர் கூறுகின்றார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், பேதுரு செய்த பெரிய பாவம்பற்றி முதலில் வெளிப்படுத்தி னவர் பேதுருவே என்பது இங்கு விளங்குகிறது.

இது பேதுரு பின்வருமாறு கூறுவதுபோல் உள்ளது: "எனக்கு நடந்ததை உங்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலம், நீங்கள் பயன்பெறும்படி நான் விரும்புகிறேன். இப்பாடங்களைக் கற்றுக்கொள்ளுங்கள்: முதலாவது-யார் வேண்டுமானாலும் விழுந்துபோகக் கூடும்-நான் விழுவேன் என்று எண்ணவில்லை, ஆயினும் விழுந்து போனேன் - நீங்களும் அதேபோலத்தான். இரண்டாவது-நீங்கள் விழுந்துபோகும்போது அதுவே முடிவு

அல்ல. கர்த்தர் கிருபையும், இரக்கமும் உள்ளவர். அவர் உங்களுக்கு இரண்டாவது வாய்ப்பைத் தருகிறார். நீங்கள் மறுபடி அவரிடம் திரும்ப முடியும்.''

இந்தப்பாடம் சிலருக்கு சேவல் கூவும் நேரமாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். குறைந்த பட்சம் ஒருவராவது தனக்கு நேர்ந்தவைகள் எல்லாவற்றையும் உணர்ந்து பார்த்து, மனந்திரும்புதலைக் காண்பித்து, தேவனிடம் திரும்பும்படி உற்சாகப்படுத்துகிறேன்.

சாத்தான் இரண்டு பெரிய பொய்களைக் கொண்டுள்ளான். நீங்கள் பதில் தர வேண்டிய சமயத்தில், ''ஏன் இவ்வளவு அவசரம்? கர்த்தருக்குக் கீழ்ப்படிவதில் அவசரம் காட்டக் கூடாது'' என்கிறான். நீங்கள் பெரிய தவறு செய்த பின்பு அவன் தனது இரண்டாவது பொய்யை கூறுகிறான்: "மிகவும் தாமத மாகி விட்டது, நீ அதிக தூரம் சென்றுவிட்டாய்" என்கிறான். பொய்க்குப் பிதாவை நீங்கள் நம்பாதிருங்கள். உங்கள் இருதயத் தைக் கர்த்தரிடம் கொடுப்பதற்குத் தாமதப்படுத்த வேண்டாம். உங்கள் இருதயம் தொடப்பட்டால் நீங்கள் கர்த்தரிடம் உடனே திரும்பத் தடையேதும் இல்லை!

பேதுரு பாவம் செய்தபோது, கர்த்தர் நின்று அவரைப் பார்த்தார். கர்த்தர் இப்போது உங்களைப் பார்த்துக்கொண்டி ருக்கிறார். அது எப்படிப்பட்ட பார்வையாயிருக்கிறது? சந்தோஷமான பார்வையா? சலிப்புள்ள பார்வையா? எது எப்படியிருப்பினும் அது ஒரு அன்புள்ள, இரக்கமுள்ள பார்வையாயிருக்கும் என்பது உறுதி.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம்பெற வேண்டியி ருந்தால், அல்லது மறுபடியும் கர்த்தருக்குள் ஒப்புரவாக வேண்டியிருந்தால் உங்கள் இருதயம் தொடப்படும்படி நீங்கள் அனுமதிப்பீர்களா?

---

குறிப்புகள்

[1]செஸ்ட்டர் டேவிஸ் என்ற எனது நண்பர் ஒருவர் சேவல் தான் கூவுவதின் மூலம் தனது ஆட்சியைக் குறிப்பிடுகிறது - விசேஷமாய் தனது போட்டியாளர் களாகிய காகங்களுக்கு அதை அடையாளப்படுத்துகிறது என்று கூறுவார். [2]KJVயில் இவ்வசனத்தில் "இடறுதல்" என்ற வார்த்தை உள்ளது. [3]இவ்விசாரணையின்போது யோவான் எங்கிருந்தார் என்பது நமக்குத் தெரியவில்லை. ஒருவேளை, நடப்பதைப் பார்க்கும்படிக்கு அவர் உள்ளே அனுமதிக்கப்பட்டிருக்கலாம். [4]KJVயில், பேதுரு,

கூரையிலிருந்து தொங்கும் ''முற்றம்'' என்ற பகுதிக்குச் சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. [5]அமெரிக்க தேசத்தில் இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று மிகவும் முரண்பட்ட உச்சரிப்புகள் ஆகும். இதை நல்லமுறையில் விளக்க வேறு உச்சரிப்புகள் பயன்படுத்தப்படலாம்.

## கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

*வடக்கு கரோலினாவின் ஒரு ஆழமான நீரோடைக்குள் வெகு காலமாக ஒரு பொருள் இருந்தது. அவ்வழியே போனவர்கள் அதை அசிங்கமான ஒரு கட்டியென்ற அளவில் தான் பார்த்தனர். ஒரு நாள் ஏழை மனிதன் ஒருவன் அந்தக் கனமான கட்டியை எடுத்து தனது வீட்டின் கதவைத் திறந்த நிலையில் வைக்க அதனடியில் அண்டை கொடுத்து வைத்தான். ஒரு நாள் அந்த ஏழை மனிதனின் வாசலண்டையில் நின்ற ஒரு புதை பொருள் ஆராய்ச்சியாளர், பாறைப் பகுதியில் காணப் படுவதிலேயே, பெரிய அளவு தங்கக்கட்டி அக்கதவினடியில் இருக்கிறதென்று கண்டார்.*

*அநேகர் கர்த்தராகிய இயேசுவைப் பார்க்கின்றனர். சிலர் அவரை கலிலேயக் குடிமகனாகப் பார்த்து, அவரை விட்டுத் திரும்பிக்கொள்கின்றனர். மற்றும் சிலர் அவரை ஒரு தீர்க்கதரி சியாகப் பார்த்து நின்று, அவர் சொல்வதைக் கவனிக்கின்றனர். மற்றும் சிலர் அவரைப் பார்த்து, தேவகுமாரன் என்றறிந்து, தொழுதுகொள்ளும்படி நிற்கின்றனர். கர்த்தராகிய இயேசுவை நீங்கள் காணும் வகை எப்படிப் பட்டது? அவர் யாருடைய குமாரன்? இந்த முக்கியமான கேள்விகளுக்கு நீங்கள் கொடுக்கும் பதில்களே உங்கள் நித்திய வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றது.*